JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

DVC.No. 9/2021 Date: 24.05.2023 P.W.1

பெயர் : சங்கீதா

தந்தை /கணவர் பெயர் : தயாளன்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 24th day of May 2023.

எதிர்மனுதாரர் ஆஜரில் உள்ளார்.

**சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கபட்ட சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

1. என் குழந்தையின் பிறந்த நாள் 06.05.2011 என்றாலும் என் குழந்தை அவருடைய பிறந்த நாளை பெரியப்பா ராஜேந்திரன் வீட்டில் கொண்டாடிவிட்டு அங்கே தங்கியிருந்தார் என்றால் சரியல்ல, வீட்டில் தான் கொண்டாடினார். என் கணவரின் அண்ணனான ராஜேந்திரனுக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். விடுமுறை நாட்களில் என் குழந்தை ராஜேந்திரன் வீட்டில் தங்கவைத்துவிட்டு நான் கணவரின் வீட்டில் தங்கியிருந்தேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 8 கூறிய விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. 23.05.2017 தேதி அன்று என் கணவர் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டு ரெட்ஹில்ஸ் அவரது உடல்நிலை சரியில்லாத நண்பரை பார்ப்பதற்காக சென்று வந்தார் என்றால் சரியல்ல. அவர் வீட்டிற்கு மாலை 5.00 மணிக்கு மேல் வந்தார்.

2. அன்றைய தினமே என் தம்பிக்கு போன் செய்து வரவைத்து அவருடன் நான் என் அம்மா வீட்டிற்கு செல்வதாக என் கணவரிடம் போன் மூலமாக தகவல் கொடுத்தேன் என்றால் சரியல்ல. பத்தி 9 ல் பிரமாண வாக்குமூலத்தில் கூறியவாறு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் சிகிச்சைக்கு சென்று வந்தேன். 29.05.2017 தேதி வரை என் குழந்தை என் கணவரின் அண்ணன் ராஜேந்திரன் வீட்டில் இருந்தார் என்றாலும் அன்றைய தினம் தான் நான் குழந்தையை என் அம்மா வீட்டிற்கு அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. என் கணவர் வீட்டில் தான் இருந்தேன். 23.05.2017 லிருந்து 29.05.2017 வரை நான் என் அம்மா வீட்டில் தான் இருந்தேன். என் மகன் என் கணவர் வீட்டில் இருந்தார்.

3. முருகன் என்பவர் என்ன உறவுமுறை என்றால் அண்ணன் ஆவார். அவர் என் தாய் மாமாவின் மனைவியின் அண்ணன் ஆவார். முருகனின் மகளுடன் எனது கணவர் தகாத உறவில் இருந்ததற்கான ஆடியோ, வீடியோ பதிவுகள் மற்றும் புகைப்படங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆடியோ பதிவுகள் கொடுத்துள்ளேன். என் உறவினர் சங்கீதா மீது சந்தேகம் ஏற்படுத்திக்கொண்டு நான் தகராறு செய்து கொண்டு காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது என் கணவர் சேர்ந்து வாழ்வதாக கூறியதின் அடிப்படையில் புகாரானது முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. என் கணவர் வேலை செய்யும் டி.சிஎல் நிறுவனத்திற்கு என் கணவர் வேறு பெண்ணுடன் தொடர்பில் உள்ளார் என்றும் அவரை வேலையிலிருந்து நீக்கவும் கூறி கடிதம் அனுப்பினேன் என்றால் நிறுவனத்திற்கு நான் புகார் கடிதம் அனுப்பினேன், அவரை திருத்த வேண்டும் என்று கடிதம் எழுதியிருந்தேன், வேலையிலிருந்து நீக்க கோரி நான் கேட்கவில்லை. என் குழந்தையை என் கணவர் ஆவடியில் உள்ள மிலிட்டரி பள்ளியில் சேர்த்தியிருந்தார் என்றால் சரிதான். என் குழந்தையின்

எதிர்காலத்தை கருத்தில் கொள்ளாமல் அங்கியிருந்து மாற்றி நகராட்சி பள்ளியில் சேர்த்தேன் என்றால் சரிதான். என் கணவர் எனக்கும் என் குழந்தைக்கும் எந்த வசதியும் செய்து தராததால் அவ்வாறு சேர்த்தேன். 29.05.2017 தேதிலிருந்து நான் என் கணவருடன் சேர்ந்து வாழாமல் என் அம்மா வீட்டில் இருக்கிறேன் என்றால் சரிதான்.

5. இந்த வழக்கை டிவிசி 9/2021 வழக்கில் உள்ள மனுவை நான் 2 ஆண்டுகள் கழித்து 15.10.2019ம் தேதி தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வண்டியை தவிர மற்ற சீதன பொருட்களை நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் தனியாக லிஸ்ட் தாக்கல் செய்துள்ளேன். நான் என் அம்மா அப்பா வசிக்கும் அதே தெருவில் தனியாக வீடு கட்டிக்கொண்டு என் குழந்தையுடன் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் கூறியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் என் கணவர் மீது சந்தேகத்தின் அடிப்படையில் தான் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிக்ள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. என் மாமியார் வீட்டில் குடும்பம் நடத்துவதற்கு மனமில்லாமல் நான் தனியாக வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/- V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur